NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p5
**Date:** 7 May 2021

# மின்னிலக்கத்தால் சிறந்த, நிலைத்தன்மை மிக்க கட்டடங்களை உருவாக்க தடம் பதிப்போம்

கொவிட்-19 நோய்ப் பரவல் சூழலால் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறையில் மின்னிலக்க உருமாற்றம் வேகமடைந்துள்ளது. மின்னிலக்க கருவிகளும் மென்பொருள்களும் எவ்வாறு செயல்முறைகளை வேகமாகவும் பாதுகாப்பாகவும் சிக்கனமாகவும் மாற்றுகின்றன என்பதை இந்த உயர்கல்வி நிலைய மாணவர்கள் காண்பிக்கிறார்கள்.

**கொள்ளை நோய்க்கு எதிரான சிங்கப்பூரர்களின் போராட்டம்**
பாகம் 6/6

இர்ஷாத் முஹம்மது

ஒரு கட்டடத்தின் வடிவமைப்பு நினைவில் நிற்பதாக மட்டுமல்லாமல் நல்ல கட்டடக்கலையையும் கொண்டுவருவது நல்ல காலத்திலேயே சவால்மிக்கது. சென்ற ஆண்டு உயர்கல்வி நிலைய மாணவர்கள் பங்கேற்ற போட்டியில் எதிர்பாராத தடையைச் சந்தித்தனர் - நோய்ப் பரவல் சூழலில் அந்தப் பணியைச் செய்யவேண்டியிருந்தது.

“எங்கள் திட்டங்களைப் பற்றி கலந்து ஆலோசிக்கவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளாமல் இருந்தது. இணையச் சந்திப்புகள் முதல் திட்டங்களை மெய்நிகர் முறையில் பதியவும் அனைத்தையுமே மின்னிலக்கத் தளத்திலேயே நாங்கள் செய்தோம்,” என்றார் சிங்கப்பூர் தேசிய பலகலைக்கழகத்தைச் சேர்ந்த எட்டு பேர் கொண்ட குழுவான ‘டீம் ஏஸ்’ஐ வழிநடத்திய 24 வயது கிரேஸ் ஓங். 2020ஆம் ஆண்டின் அனைத்துலக கட்டட வடிவமைப்புப் போட்டியின் மூன்று வெற்றியாளர்களில் அக்குழுவும் ஒன்று.

அப்போட்டியை கட்டட, கட்டுமான ஆணையம் ஆண்டு தோறும் ஏற்பாடு செய்துவருகிறது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரி, சிங்கப்பூர் தொழில்நுட்ப, வடிவமைப்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைப் பங்காளிகளாகக் கொண்டு அந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டின் கருப்பொருள் “நீடித்த நிலைத்தன்மையும் அறிவார்ந்த நகரமும்”.

குமாரி ஓங் மற்றும் இதர குழுக்களின் அனுபவங்கள், சிங்கப்பூரின் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறை மின்னிலக்கத்தை உடனடியாக தழுவ வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் உணர்த்தியது. குறிப்பாக கொவிட்-19 சூழலில் மீட்சித் திறனை வலுப்படுத்தவும் புதிய இலக்கை நோக்கிய பயணத்தில் அத்துறை மறுவடிவம் பெறவும் அத்தகைய மாற்றம் அவசியம்.

நீ ஆன் சிட்டிக்குப் பின்னால் உள்ள இடத்தில் பல பயனீட்டு மேம்பாடு ஒன்றை கற்பனையில் கட்டவேண்டிய போட்டியில் பங்குபெற்ற குழுக்கள் மின்னிலக்க முறையில் கட்டுமானத்திற்கான திட்டங்களைத் தீட்டினர். நேரத்திற்கும் செலவிற்கும் இடையிலான நடுநிலையை அவர்கள் கண்டுபிடிக்கவேண்டி இருந்தது.

மின்னிலக்கம் வழி நல்ல கட்டடங்களை வடிவமைக்கும் சிறந்த அனுபவத்தைக் குழுவினர் பெற்றனர்.

மென்பொருள் கொண்டு கட்டடம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தை ஆய்வு செய்து முப்பரிமாண வடிவத்தை ஒவ்வொரு குழுவும் தயாரித்தது. அதைக் கொண்டு காற்றோட்டத்தை அதிகரிக்க வழிகள் ஆராயப்பட்டன. சிறந்த வடிவத்தைக் கொண்டு குடியிருப்பாளர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் உகந்த வடிவம் மேம்படுத்தப்பட்டது.

“வெவ்வேறு மாற்றங்களைச் செய்து மின்னிலக்க வெளியில் வைத்து, எந்த அளவிற்கு சுற்றி இருக்கும் கட்டடங்கள் நிழல் படுகிறது, காற்று, வெயில் படும் திசை, அளவு போன்றவற்றை அறிந்து மாற்றம் செய்ய முடிந்தது,” என்றார் ‘டீம் ஆர்டன்ட்’ குழுவைச் சேர்ந்த சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரியில் பயிலும் ஃபூ ஜிங் ஸி, 22. எழுவர் கொண்ட வெற்றிக் குழுவைச் சேர்ந்தவர் அவர்.

கொவிட்-19 நோய்ப் பரவல் சூழலில் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறை மீண்டும் பாதுகாப்பாக தொடக்கம் கண்டு புதிய வாய்ப்புகளை அரவணைக்க மின்னிலக்கம் முக்கிய அங்கம் வகிக்கும்.

நோய்ப் பரவல் சூழலுக்கு முன்னரே எதிர்கால பொருளியல் மன்றத்தின் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் குழுமம் இந்தத் துறையை உருமாற்ற வழிகளைக் கண்டறிந்துள்ளது.

மேலும் வலிமை பெற்று எழுவதற்கான பணிக்குழுவும் இத்துறையை மின்னிலக்கமாதலை அரவணைக்கும் ‘ஒன்றிணைந்த சிங்கப்பூர்’ இயக்கத்திற்கான செயற்கூட்டணியை நிறுவியுள்ளது.

அதன் மூலம் துறை முழுதும் பொதுவான தரவு சூழல் தரவு தரத்தை உருவாக்கி, தொடர்ந்து மதிப்பு கூட்டும் சிக்கல்மிக்க வேலை வழிமுறைகளை இணைக்க அவற்றை ஆதரவளிக்கச் செய்யும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரின் நீடித்த நிலைத்தன்மை குறிக்கோள்களுக்கு மின்னிலக்கமாதல் மிகவும் முக்கியம் என்றும் பொதுவான தரத்தைக் கொண்டிருப்பதால் திறன்மிக்க பங்காளித்துவத்தை ஊக்குவிக்க முடியும் என்றும் கூறினார் அனைத்துலக கட்டட வடிவமைப்புப் போட்டியின் நீதிபதிகளில் ஒருவரான ‘சர்பானா ஜூரோங்’ நிறுவனத்தின் முதன்மை வடிவமைப்பாளர் திரு ஒவன் வீ, 47.

“உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறையில் மின்னிலக்கம் முக்கிய அங்கம் வகிக்கவும் அனைவருக்கும் வாழ்வின் அங்கமாக அது விளங்கவும் நமது முயற்சிகளைத் தொடர்ந்து அதிகரிக்கவேண்டும்,” என்ற அவர், பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.



அனைத்துலக கட்டட வடிவமைப்புப் போட்டியின் மூன்று வெற்றியாளர்களில் ஒன்றான ‘டீம் ஏஸ்’ குழு மின்னிலக்கத் தளத்திலேயே சந்தித்து தங்கள் பணிகளைச் செய்தது. **படம்: கோ மெங் குவாங்**

விளம்பரச் செய்தி

## ஒன்றிணைந்து, மேலும் வலிமை பெற்று எழுதல்

கொவிட்-19 சூழலால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வர்த்தகங்களுக்கும் உதவ மேலும் வலிமை பெற்று எழுவதற்கான பணிக்குழு, ‘ஒன்றிணைந்த சிங்கப்பூர்’ இயக்கத்திற்கான செயற்கூட்டணியை அமைத்துள்ளது. வாய்ப்புகள் உள்ள அம்சங்களில் திட்டங்களை உடனடியாக செயல்படுத்த அந்தச் செயற்கூட்டணி அரசாங்கத்தின் பங்காளித்துவத்தில் முனையும். உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் துறையை மின்னிலக்கப்படுத்தும் செயற்கூட்டணியைத் தொடங்கி அத்துறையின் மின்னிலக்க உருமாற்றத்தை முடுக்கிவிடுவதுடன் மீள்திறனை வலுவாக்கவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. கட்டட, கட்டுமான ஆணையம், தகவல் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம், ஜேடிசி கார்ப்பரேஷன் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றி, மின்னிலக்கத்தை அரவணைக்கவும் மின்னிலக்கப் படிப்பறிவை மேம்படுத்தவும் துறை சார்ந்த மின்னிலக்க பங்காளித்துவத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுவரை 300க்கும் மேற்பட்ட துறை பங்குதாரர்கள், 25 திட்டங்களின் உறுதியுடன் செயற்கூட்டணி இத்துறை மின்னிலக்கத்தின் பங்காளித்துவத்தைத் தொடங்கியுள்ளது. மின்னிலக்கம், மீள்திறன், நிலைத்தன்மை, உற்பத்தித்திறனுடன் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் இருப்பது செயற்கூட்டணியின் நோக்கம்.
மேலும் தகவல்களுக்கு emergingstronger.sg

கொவிட்-19 சூழலால் மாற்றப்பட்ட உலகில் புதிய வாய்ப்புகளை அரவணைக்க கைகோத்துள்ள மீட்சித் திறன்மிக்க சிங்கப்பூரர்கள் குறித்த ஆறு பாகத் தொடரின் இறுதிக் கட்டுரை இது.

இணைந்து வழங்குவது

Emerging Stronger Together

SG TOGETHER

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.